அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2021/2022

# தமிழ்

## ஆண்டு 7

மாதிரித் தேர்வுத்தாள்

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்**<br><br>**நாள்: சனிக்கிழமை** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள்: வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

மாதிரிக் கேள்வித்தாள்

## பகுதி 1- எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3 4**

1. சிரித்தான் என்பது
   1. வினைமுற்று
   2. பெயரெச்சம்
   3. வினையெச்சம்
   4. எச்சவினை

2. மலையும் மலைசார்ந்த இடமும்
   1. குறிஞ்சி
   2. முல்லை
   3. மருதம்
   4. நெய்தல்

3. கவிச்சுவை சொட்டச்சொட்டப் பாடல்கள் பாடினர். இதில் சொட்டச்சொட்ட
   1. இணைமொழி
   2. அடுக்குமொழி
   3. அடுக்கிடுக்குமொழி
   4. இரட்டைமொழி

4. கூத்துகளைப் பயிற்றுவித்து மேடை ஏற்றுபவர்
   1. நடிகர்
   2. அண்ணாவியார்
   3. கூத்தர்
   4. சிற்பி

5. வெம்மை + நீர் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. வென்னீர்
   2. வெந்நீர்
   3. வெம்நீர்
   4. வெம்மைநீர்

6. காரேயுன் நீரையெல்லாங் கள்ளன் கவர்ந்தானோ? இதில் கார் என்பது
   1. மழை
   2. முகில்
   3. கடல்
   4. தண்ணீர்

7. பிரித்தானியருக்கு அடிபணியாது வன்னியை ஆண்ட மன்னன்
   1. பண்டாரவன்னியன்
   2. கயிலாயவன்னியன்
   3. காக்கைவன்னியன்
   4. சங்கிலியன்

மாதிரித் தேர்வுத்தாள்

1 2 3 4

8. ஆடு கத்தும் அதுபோல குதிரை
   1. கனைக்கும்
   2. கத்தும்
   3. பிளிறும்
   4. சீறும்

9. கண்ணன் மிருதங்கம் வாசிப்பதில் வல்லவன். இதில் கண்ணன்
   1. நான்காம் வேற்றுமை
   2. இரண்டாம் வேற்றுமை
   3. மூன்றாம் வேற்றுமை
   4. முதலாம் வேற்றுமை

10. பண்டைத்தமிழர் நிலங்களை வகைப்படுத்தியது
   1. நான்காக
   2. எட்டாக
   3. மூன்றாக
   4. இரண்டாக

11. தீ என்பதன் ஒத்தபொருட்சொல்
   1. வானம்
   2. புயல்
   3. நீர்
   4. நெருப்பு

12. நாளை கோவிலுக்குப் போவோம். இதில் தோன்றா எழுவாய்
   1. நாளை
   2. நீ
   3. நாம்
   4. நான்

13. ஆதிகாலத்தில் தமிழரின் தலைநகரமாகவும் வணிக நகரமாகவும் விளங்கிய ஊர்
   1. வவுனியா
   2. மன்னார்
   3. பூநகரி
   4. முல்லைத்தீவு

14. பனையோலை என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. பனை + யோலை
   2. பனை + ஓலை
   3. பனம் + ஓலை
   4. பனம் + யோலை

1 2 3 4

15. மாலாவும் வாணியும் ஓடி ....... என்பது
    1. பெயரெச்சச்சொற்றொடர்
    2. பெயர்ச்சொற்றொடர்
    3. வினையெச்சச்சொற்றொடர்
    4. சொல்லியம்

16. நாம் தொண்டுள்ளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இச்சொல்லியம்
    1. வினா
    2. வியங்கோள்
    3. கூற்று
    4. ஏவல்

17. நான் தேர்வை எழுதி முடித்தேன். இதில் எழுதி என்பது
    1. பெயரெச்சம்
    2. வினையெச்சம்
    3. வினைமுற்று
    4. யெர்ச்சொல்

18. வன்னி நிலப்பரப்புக்குள் அடங்கும் மாவட்டங்களின் எண்ணிக்கை
    1. நான்கு
    2. ஐந்து
    3. மூன்று
    4. ஒன்பது

19. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது
    1. எழுவாய்
    2. பயனிலை
    3. வேற்றுமை
    4. செயப்படுபொருள்

20. ஒன்று + ஒன்று என்பதன் புணர்ச்சி வடிவம்
    1. ஒவ்வொன்று
    2. ஒன்றுஒன்று
    3. ஒன்றொன்று
    4. ஒவ்ஒன்று

(20×1=20 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**2. கீழ்க்காணும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமைய சொல்லியம் எழுதுக.**

1. கரை

பெயர்:

_______________________________________________

வினை:

_______________________________________________

2. அலை

பெயர்:

_______________________________________________

வினை:

_______________________________________________

(2×2=4 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் சொல்லியங்களின் திணை, பால், இடம் என்பவற்றை எழுதுக.**

| சொற்கள் | திணை | பால் | இடம் |
|---|---|---|---|
| வந்தான் | | | |
| நீந்துகின்றன | | | |

(6X1=6 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**4. கீழ்க்காணும் வினாக்களுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சங்ககாலம் எந்த நூற்றாண்டு வரை நீடித்திருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்?

2. குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பில் திரிந்து வறண்டு தோன்றிய நிலம் எது?

3. சங்க இலக்கியங்கள் எவை?

4. ஈழத்தில் கூத்துகள் நடைபெறும் இடங்கள் இரண்டு எழுதுக.

5. அம்மா கத்தியால் வெட்டினார். இச்சொல்லியத்தில் வேற்றுமை உருபு ஏற்றசொல் எது? அது எத்தனையாம் வேற்றுமை?

6. வையகத்தில் தீமை ஒழிக! - இச்சொல்லியம் எந்தச் சொல்லிய வகையைச் சேர்ந்தது?

7. சொல்லிய உறுப்புகள் அமைந்துவரச் சொல்லியம் ஒன்று எழுதுக.

(5×2=10 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**5. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் - என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் - வாழ்வு
கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து
கீழ்நிலை யுற்றாலும் - மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ்மகளின் துயர்
துடைக்க மறப்பேனா?

- கவிஞர் காசி ஆனந்தன்

1. இப்பாடல் யாருடைய துயரைத் துடைக்க கவிஞர் விரும்புகிறார்? (1 புள்ளி)

________________________________

2. கவிஞர் எத்தகைய உணர்வை வெளிப்படுத்துகிறார்? (1 புள்ளி)

________________________________

3. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றை எழுதுக. (2×1=2 புள்ளிகள்)

1. இடப்பெயர் ________________ 3. சினைப்பெயர் ________________

4. தமிழ் மக்களை யார் தொன்றுதொட்டு வளர்த்ததாகக் கவிஞர் கூறுகிறார்? (1 புள்ளி)

________________________________

மாதிரித் தேர்வுத்தாள்

**6. கீழ்க்காணும் சொல்லியங்களை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

1. நான் பள்ளியில் பாடம் படித்தேன்.

_______________________________________________

2. நானும் அக்காவும் உறவினர்களுடன் தமிழில் கதைப்போம்.

_______________________________________________

3. தமிழ் மன்னர்கள் மக்களைப் பாதுகாத்தனர்.

_______________________________________________

4. நாம் பெற்றோரைப் பணிந்து நடப்போம்.

_______________________________________________

5. உயிரினங்கள் வாழ்வதற்குக் கதிரவனின் ஒளி தேவை.

_______________________________________________

(5×1=5 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் பண்பாட்டு அடையாளங்கள்
2. நாட்டார் பாடல்கள்
3. கோடை விடுமுறையில் மேற்கொண்ட சுற்றுலா

**உள்ளடக்கம்:**

- சென்ற நாடு
- பார்த்த இடங்கள்
- பெற்ற பயன்கள்

(15 புள்ளிகள்)

மாகிரித் தேர்வத்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்

## பகுதி – 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

எல்லாளன், சங்கிலியன், கயிலைவன்னியன், பண்டாரவன்னியன் போன்றோர் ஈழத்தமிழ் மன்னர்களில் சிலர் ஆவர். இவர்கள் வீரமும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உள்ளவர்களாக விளங்கினார்கள். தாய்மண்ணின் வளங்களை மேம்படுத்திப் பாதுகாத்தார்கள். இவர்களுடைய ஆட்சியில் தமிழ் மக்கள் தமது தாய்மண்ணில் சுதந்திரமாக வாழ்ந்தார்கள். இவர்களுடைய ஆட்சியில் தமிழ்மொழியும், தமிழர் வாழ்வும் உயர்ந்த நிலையில் இருந்தன. இம்மன்னர்களில் சங்கிலியன், பண்டாரவன்னியன் ஆகியோர் ஐரோப்பியரையும் எதிர்த்துப் போராடினார்கள். தாய்மண்ணுக்காகத் தங்கள் உயிரையே கொடுத்தார்கள். அவர்களைப் போன்று தாய்நாட்டுக்காக உயிர்கொடுத்தவர்கள் மாவீரர்கள். எனவே, தமிழ் மன்னர்களையும் மாவீரர்களையும் மறவாது போற்ற வேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

1. ஈழத் தமிழ் மன்னர்கள் இருவரின் பெயர்களை எழுதுக.

___________________________________________

2. தமிழ் மன்னர்கள் எப்படிப்பட்டவர்கள்?

___________________________________________

3. ஐரோப்பியரை எதிர்த்துப் போராடிய மன்னர்களுள் ஒருவரின் பெயரை எழுதுக.

___________________________________________

4. மாவீரர்கள் எதற்காகத் தங்கள் உயிரைக் கொடுத்தார்கள்?

___________________________________________

5. தமிழர்களாகிய எமது கடமை யாது?

___________________________________________

(5X2=10 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

2. கீழ்க்காணும் அழைப்பிதழைப் படித்து தரப்பட்ட சொல்லியங்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

# அழைப்பிதழ்

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின்

மேம்படுத்தப்பட்ட தமிழ்ப் பாடநூல்கள்

இணையவழி வெளியீட்டு நிகழ்வு

அன்புடையீர்,

தமிழ்மொழிக்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் புதிய கற்பித்தல் உத்திகளையும் கல்வியியல் தொழில்நுட்பங்களையும் உள்வாங்கி மீளாக்கம் செய்யப்பட்ட புதிய பாடநூல்கள் அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்படவுள்ளன. வாழிடநாடுகளின் தாய்மொழிக் கல்விக்கூடங்களில் கற்பித்துவரும் ஆளுமையும் ஆற்றலும் மிக்க ஆசிரியர்களால் பேராசிரியர்களின் வழிகாட்டலுக்கமைய இந்த நூல்கள் ஆக்கப்பட்டுள்ளன.
இவை மொழியறிவைச் சிறப்புற மேம்படுத்துவதுடன்,
இனஞ்சார்ந்த இருப்பையும் வலுப்படுத்துவனவாக அமைக்கப்பட்டுள்ளன.
வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெளியீட்டு விழாவில் இணைந்து கொண்டு, உயரிய இக்கல்விப்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

நாள்:
05.06.2021
சனிக்கிழமை

நேரம்:
ஐரோப்பிய நேரம்: பி.ப. 4:00 மணி
பிரித்தானிய நேரம்: பி.ப. 3:00 மணி
கனடிய நேரம்: மு.ப. 10.00 மணி

கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணைய இணைப்பு: zoom Meeting ID: 979 4252 5178
Passcode: 896221

- தமிழால் இணைவோம் -

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS
Email: info@icedt.education

1. இதுவொரு தமிழ்ப்பாடநூல்கள் வெளியீட்டு நிகழ்வு ஆகும். ( )
2. வெளியீட்டுநிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ( )
3. வெளியீட்டு நிகழ்வு பிரித்தானிய நேரம் பி.ப. 10 மணிக்கு நடைபெற்றது. ( )
4. தமிழ்ப்பாடநூல் ஆக்கத்திற்குப் பேராசிரியர்கள் வழிகாட்டினார்கள். ( )
5. இவ்வெளியீட்டு நிகழ்வு இணையவழியாக நடைபெற்றது. ( )

(5×1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 04 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

மாதிரித் தேர்வத்தாள்

மாதிரிக் கோர்வைக்கான